IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 107/2018

Deposition of Witness : DW 4

Name : ராஜகோபால் (வயது – 69)

Father's Name /W/o : த/பெ சின்னகண்ணு

Calling : –

Address : ஓச்சலம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 20.07.2026.

## குறுக்கு விசாரணை

1. நான் சாட்சியம் அளிப்பதற்கு யார் அழைத்து வந்தார் என்றால் மோகன் அழைத்து வந்தார். நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. பிரதிவாதி ஓச்சலத்தில் வசித்து வருவதாக என் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் பழைய ஓச்சலமா அல்லது புதிய ஓச்சலமா என்றால் பழைய ஓச்சலம் ஆகும். ஓச்சலம் மட்டும் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரிதான். நான் பழைய ஓச்சலத்தில் வசித்து வருகிறேனா அல்லது புதிய ஓச்சலத்தில் வசித்து வருகிறேனா என்றால் பழைய ஓச்சலத்தில் வசித்து வருகிறேன்.

2. எனக்கும் பிரதிவாதிக்கும் என்ன உறவு முறை என்றால் நண்பர்கள் ஆவோம். எனக்கு என்ன வயது என்றால் 69 ஆகும். பிரதிவாதிக்கு என்ன வயது என்றால் ஞாபகமில்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் பழக்கமில்லை என்றாலும் நான் பிரதிவாதிக்கு நண்பன் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் வெளியூரிலிருந்து சிறுவயதிலியே இங்க வந்துவிட்டார்கள். பிரதிவாதியின் பூர்வீகம் எந்த ஊர் என்றால் எறக்கந்தொட்டி ஆகும்.

3. பிரதிவாதியின் உறவினர்கள் யாரும் இந்த கிராமத்தில் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி மற்றும் பிரதிவாதியன் சகோதரர்கள் எங்கு உள்ளார்கள் என்றால் பழைய ஓச்சலத்தில் உள்ளார்கள். பிரதிவாதியின் பெற்றோர்கள் இறந்த பிறகு சேட்டு, அன்பழகன், மோகன் வழக்கு சொத்தில் கிரையம் வாங்கினார்களா என்றால் ஆம். எந்த தேதியில் கிரையம் வாங்கினார்கள் என்றால் 1997 ஆம் ஆண்டில் கிரையம் வாங்கினார்கள். அதற்கு முன்பு பிரதிவாதிகள் எங்கு வசித்து வந்தார்கள் என்றால் ஏரிக்கரை புறம்போக்கு இடத்தில் வசித்து வந்தார்கள்.

4. எத்தனை செண்ட் நிலம் வாங்கினார்கள் என்றால் 10 செண்ட் நிலம் வாங்கினார்கள். எனக்கு அவர் வாங்கிய விபரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதியில் கிரையத்தை பதிவு செய்தார்கள் என்றால் 10.11.1997 தேதியில் பதிவு செய்தார்கள். மேற்படி 10 செண்ட் எவ்வளவு மேற்படி 10 செண்ட்டில் சதுரஅடி என்று என் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் ஒவ்வொருக்கும் எவ்வளவு சதுரஅடி வருகிறது என்றால் தெரியாது. மேற்படி 10 செண்ட்டில் பிரதிவாதி எந்த பக்கத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் வாதியின் மனைக்கு மேல்பக்கத்தில் வீடு கட்டியுள்ளார். பிரதிவாதியின் சொத்திற்கு மேல் யார் வசித்து வருகிறார் என்றால் அவரின் சகோதரர் அன்பழகன் மனை உள்ளது.

5. மோகன் மற்றும் அவரின் சகோதரர்களுக்கு தனித்தனியாக சொத்து ஒதுக்கப்பட்டதா என்றால் ஆம். பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா அவர் தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி கட்டிய வீட்டின் அளவு தெரியுமா என்றால் வடக்கு தெற்கு 22 அடி கிழக்கு மேற்கு 20 அடி ஆகும். மேற்படி வீடு கட்டியது போக எத்தனை அடி இடம் காலியாக உள்ளது என்றால் ஞாபகமில்லை. வாதி பிரதிவாதியின் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக என் பிரமாண வாக்குமூலத்தில் நான் தெரிவித்துள்ளேன் என்றாலும் எந்த தேதியில் வாதி ஆக்கிரமிப்பு செய்தார் என்றால் ஞாபகமில்லை.

6. வழக்கு பற்றிய விபரம் எதுவும் எனக்கு ஞாபகமில்லையா என்றால் ஞாபகமில்லை. வாதி சட்ட முரணாக பிரதிவாதியின் இடத்தை நுழைந்ததாக நான் தெரிவித்துள்ளேன் என்றாலும் மேற்படி சட்ட முரணாக வாதி எப்போது நடந்து கொண்டார் என்றால் ஞாபகமில்லை. என் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் மனைகளை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் பிரதிவாதி மற்றும் அவரின் சகோதரர்கள் மனைகளை பிரித்து கொண்டார் என்றால் சரியல்ல. கூட்டு பட்டாவாக தான் உள்ளது. மேற்படி பிரதிவாதிகள் எதற்காக அடமானம் வைத்தார்கள் என்றால் தறி போடுவதற்காக அடமானம் வைத்தார்கள்.

7. அந்த இடத்திற்கு உண்டான ஆவணம் பெற்றுக்கொண்டுதான் கடன் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வாதி பிரதிவாதியை மிரட்டுவதாக என் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் எங்கே எப்போது என்ன மிரட்டினார்கள் என்றால் பிரதிவாதி வீட்டில் வந்து மிரட்டினார் மேற்படி விபரம் பிரதிவாதி சொல்லி தெரியும். வழக்கறிஞர் ஆணையர் வந்த போது நான் எங்கு இருந்ததாக பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்தேன் என்றாலும் யார் வீட்டில் இருந்தேன் என்றால் மோகன் வீட்டில் இருந்தேன். வழக்கறிஞர் ஆணையர் வந்த தகவல் பிரதிவாதி என்னிடம் தெரிவித்தார்.

8. பிரதிவாதிகளிடம் பத்திரங்கள் வழக்கறிஞர் ஆணையர் சொத்தை அளந்ததாக என் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் ஆம். இருதரப்பிலும் ஆவணங்கள் வாங்கவில்லை. மேற்படி சொத்தை அளப்பதற்கு வழக்கறிஞர் ஆணையருடன் யார் வந்தார் என்றால் கிராம நிர்வாக அலுவலர், அவரின் உதவியாளர் வந்தார்கள். வழக்கு பற்றிய விபரங்கள் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்பதால் என் சாட்சி ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வது அனைத்தும் பொய் என்றாலும் பிரதிவாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.